இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
மட்டம் 04 – 2008/2009
**LWU 2311** – ஒப்பந்தச் சட்டம்
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை - 1
காலம்: 40 நிமிடங்கள்

OPEN UNIVERSITY OF SRI LANKA
LIBRARY

திகதி: 02.10.2008 நேரம்: மு.ப 10.00 – மு.ப 10.40

ஒரு வினாவிற்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. முறையே 1950, 1960 மற்றும் 1970களில் உற்பத்தி செய்யப்பட்ட மூன்று பென்ஸ் கார்களை(Benz car) பெரேரா கொண்டுள்ளார். அவர் 1970ஆம் ஆண்டின் உற்பத்தி செய்யப்பட்ட காரினை விற்பனை செய்ய விரும்புகின்றார் ஆனால் தனிப்பட் முறையில் கார் சேகரிப்பவராக காரினை கொள்வனவு செய்பவர் இருக்க வேண்டும் என்பதனை உறுதிப்படுத்த விரும்புகின்றார். அதற்கமைய "தனிப்பட்ட கொள்வனவாளருக்கு மாத்திரம் விற்பனை செய்யப்படும்" என பத்திரிகைக்கு விற்பனை விளம்பரம் ஒன்றினை செய்கின்றார், துரதிஷ்டவசமாக, அச்சுப்பிழை காரணமாக, விளம்பரமானது 1960ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட காரிற்கு செய்யப்பட்டது. கார் வியாபாரியான பெர்னான்டோ 1950ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட ஓர் காரினை கொள்வனவு செய்ய விரும்புகின்றார், மேலும் தவறான முறையில் ஓர் நண்பன் மூலமாக, திரு.பெரேரா 1950ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட கார் ஒன்றினை விற்பனை செய்ய பத்திரிகையில் விளம்பரப் படுத்தி உள்ளதாக அறிவிக்கப்படுகின்றார்

தாம் ஓர் கார் வியாபாரி என்ற காரணத்தினால் பெரேரா தமக்கு காரினை விற்பனை செய்ய மாட்டார் என்பதனை பெர்னான்டோ அறிந்திருந்தார். எனவே அவர் பெரேராவிற்கு தொலைபேசி அழைப்பொன்றினை விடுத்து "நான் திரு. ஜயரத்தின பேசுகின்றேன். நீங்கள் பத்திரிகையில் விளம்பரப்படுத்தி இருந்த காரினை நான் கொள்வனவு செய்ய விரும்புகின்றேன், மேலும் அதற்கு இரண்டு மில்லியன் ரூபா தருகின்றேன்" என்றார். பெரேரா அதற்கு பதில் அளிக்கையில் "திரு.ஜயரத்தின, நான் உங்களுக்கு காரினை விற்பதில் ஆனந்தம் அடைகின்றேன் மேலும் அதனை நீங்கள் நன்கு பராமரிப்பீர்கள் என்பதனையிட்டு மகிழ்கின்றேன்" எனக் கூறினார். பெரேரா 1970ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட காரினை விநியோகம் செய்கையில் கொள்வனவு செய்பவர் ஓர் கார் வியாபாரி என அடையாளம் காண்கின்றார். மேலும் அதனை அவருக்கு விற்பனை செய்ய மறுக்கின்றார். ஆனால் பெர்னான்டோ குறித்த கார் 1950ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட கார் ஆக இல்லாவிட்டாலும் ஒப்பந்தத்தினை வலுப்படுத்த விரும்புகின்றார்.

சட்ட நிலைப்பாடுகளை ஆராய்க.

2. தமது சொந்த விநியோகம் நிலையம் ஒன்றினை உருவாக்கியுள்ள பீரிஸ் ஓர் ஓய்வு பெற்ற சரக்கு ஊர்தி ஓட்டுனர் ஆவார். குணரத்தின அன்ட் கம்பனியானது நாடு முழுவதும் சில்லரை விற்பனை நிலைய வலையமைப்புள்ள நிறுவனம் ஆகும். ஒக்டோம்பர் 1ஆம் திகதி வலுவிற்கு வரும்வகையில் மூன்று வருட காலத்திற்கு குறித்கு நியமிக்கப்பட்ட இடப்பரப்பிற்குள், தூரத்தினை கருதாது ஒரு சரக்கு கொள்கலன் சுமைக்கு (container load) ஐயாயிரம் ரூபாய் கட்டணத்திற்கு குணரத்தின அன்ட் கம்பனியின் உணவு வகைகளின் கொள்கலன் சுமைகளை விநியோகிப்பதற்கு பீரிஸ், குணரத்தின அன்ட் கம்பனியுடன் உடன்பாடு ஒன்றினை ஏற்படுத்திக்கொண்டார்.

தமது சரக்கு ஊர்தி தொடர்களை அதிகரிப்பதற்கு வங்கிக்கடன் ஒன்றைப் பெற பீரிஸ் இவ் ஒப்பந்தத்தில் தங்கி இருந்தார். துரதிஷ்டவசமாக, ஒன்றரை ஆண்டுகளுக்கு பிறகு ஒரு கொள்கலன் சுமைக்கு நான்காயிரம் ரூபாயாக கட்டணத்தை குறைக்காவிட்டால் தமது ஒப்பந்தத்தினை உடனடியாக மீளப்பெற்றுக் கொள்வதாக அச்சுறுத்தி குணரத்தின அன்ட் கம்பனியானது விநியோக கட்டணம் தொடர்பாக மீளப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான தமது விருப்பத்தினை பீரிஸிற்கு தெரியப்படுத்தியது. குணரத்தின அன்ட் கம்பனியின் வியாபாரத்தினை இழப்பது என்பது ஈடுகட்ட முடியாத நட்டமாகையால் பீரிஸ் இதற்கு இணக்கம் தெரிவித்தார்.

ஒப்பந்த கால முடிவில், பொருளாதார வலுக்கட்டாயம் காரணமாக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த மாற்றங்கள் வெறிதாகக்கூடியவை(voidable) என்ற அடிப்படையில் தாம் செய்த ஒவ்வொரு விநியோகத்திற்கும் தாம் இழந்த ஆயிரம் ரூபாவினை மீள உரிமைகோர முடியுமா? என பீரிஸ் உம்மிடம் ஆலோசனை கோருகின்றார்.

(பதிப்புரிமையுடையது)